TA5124

# பனைமரச் சிறப்பு

# செயல்திட்ட நடவடிக்கை - 3

# களவழிக் கற்றல்

## நோக்கங்கள் :

1. பனைசார் தொழில்கள் மற்றும் தொழிலாளர்களைப் பற்றி நேரடியாக அறிந்துகொள்ளச் செய்தல்
2. பனைமரத்தின் இயல்புகளையும், பாகங்களையும் நேரடியாக அறிந்துகொள்ளச் செய்தல்

## செயல்பாடுகள்:

1. பள்ளிக்கு அருகில் **பனந்தோப்பு** இருப்பின் மாணவர்களை அழைத்துச் சென்று நேரடியாகப் பனையின் சிறப்பம்சங்களை அறியவைக்கலாம்.

2. **பனங்கூடை/பனைவிசிறி** முடையும் இடங்கள் / விற்பனை செய்யும் இடங்கள் அருகில் இருப்பின் மாணவர்களை அழைத்துச் சென்று, அவை எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன என்பதை அறியச் செய்யலாம்.

3. **பனங்கிழங்கு மற்றும் பனங்கருப்பட்டி** போன்றவற்றைத் தயாரிக்கும் அல்லது விற்பனை செய்யும் இடங்களுக்குச் சென்று நேரடியான அனுபவத்தைப் பெறச்செய்யலாம்.

4. பள்ளிக்கு அருகில் உள்ள **பல்வேறு மரங்களை** அடையாளங்காட்டி அவற்றின் பாகங்களையும், பயன்களையும் ஆசிரியர் மாணவர்களுக்கு விளக்கிக் கூறி நேரடியான அனுபவத்தைப் பெறச் செய்யலாம் .

5. அருகில் உள்ள மரங்களைப் பார்த்துப் பாகங்களைப் புரிந்து கொள்ளும் வகையில் மாணவர்களை அம்மரங்களை **வரைந்து வண்ணம் தீட்டச்செய்யலாம்.**